



# வேளாண்மை - உழவர் நலத்துறை

## வேளாண்மைப் பொறியியல் துறை

# வேளாண்மைப் பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 1. இ-வாடகை கைபேசி செயலி மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்

பல்வேறு வேளாண் பணிகளுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால், இ-வாடகை கைபேசி செயலியின் மூலம் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கப்படுகின்றன.



விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலகங்களுக்குச் செல்லாமல், தங்கள் இருப்பிடத்திலிருந்தே இ-வாடகை கைபேசி செயலியின் மூலம் முன்பதிவு செய்யவும், வாடகைத் தொகையை செலுத்தவும் இயலும்.

#### வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் மூலம் செயல்படுத்தப்படும் பணிகள்

- நிலம் சீரமைத்தல்.
- நிலம் சமன் செய்தல்.
- உழுதல், சேறடித்தல், விதைத்தல், களையெடுத்தல் அறுவடை செய்தல், கதிரடித்தல், வேளாண் கழிவு மேலாண்மை.
- பாசனத்திற்கான குழாய்க் கிணறு அமைத்தல்.
- புவியியல் ஆய்வுக் கருவிகள் மூலம் குழாய்க் கிணறுகள் ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்த வெளிக் கிணறுகள் அமைத்திட தகுந்த இடங்களை தேர்ந்தெடுத்தல்.




#### இ-வாடகை கைபேசி செயலி

இ-வாடகை செயலியில் ஆன்லைன் மூலம் வாடகை முன்பணம் செலுத்தும் அனைத்து விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறை
இ-வாடகை

#### விண்ணப்பிக்க

https://play.google.com/store/apps/details?id=agri.tnagri என்ற இணைய முகவரியிலிருந்து விவசாயிகள் தங்கள் கைபேசியில் உழவர் செயலியை தரவிறக்கம் செய்து அதில் உள்ள இ-வாடகை செயலி மூலம் விண்ணப்பிக்கலாம்

அல்லது வேளாண்மைப் பொறியியல் துறையின் இணையதளம் https://mts.aed.tn.gov.in/evaadagai மூலம் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

#### நில மேம்பாட்டுத் திட்ட இயந்திரங்களின் வாடகை விபரம்

| வ. எண் | இயந்திரங்களின் பெயர் | வாடகை விபரம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | மண் தள்ளும் இயந்திரம் (Bull Dozer) | ரூ.1,230/- ஒரு மணிக்கு |
| 2 | டிராக்டர் (Tractor) | ரூ. 500/- ஒரு மணிக்கு |
| 3 | மினி டிராக்டர் (Mini tractor) | ரூ. 460/- ஒரு மணிக்கு |
| 4 | சக்கர வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester - Wheel Type) | ரூ. 1,160/- ஒரு மணிக்கு |
| 5 | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester - Track Type) | ரூ. 1,880/- ஒரு மணிக்கு |
| 6 | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (Backhoe with Front End Loader) | ரூ. 890/- ஒரு மணிக்கு |
| 7 | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் (Crawler Excavator) | ரூ. 1,910/- ஒரு மணிக்கு |
| 8 | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் (Truck Operated Coconut Hoist) | ரூ. 450/- ஒரு மணிக்கு |
| 9 | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் (Sugarcane Harvester with infielders) | ரூ. 5,120/- ஒரு மணிக்கு |
| 10 | கனரக மரம் அறுக்கும் கருவி (Heavy duty Chain saw) | ரூ. 85/- ஒரு மணிக்கு |

#### சிறுபாசனத் திட்ட இயந்திரங்களின் வாடகை விபரம்

| வ. எண் | இயந்திரங்களின் பெயர் | வாடகை விபரம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | சுழல் விசைத்துளைக் கருவி (Rotary Drill) | ரூ. 130/- ஒரு மீட்டருக்கு |
| 2 | பெர்குஷன் துளைக் கருவி (Percussion Drill) | ரூ. 300/- நாள் ஒன்றிற்கு |
| 3 | சிறு விசைத்துளைக் கருவி (Mini Drill) | ரூ. 70/- ஒரு மீட்டருக்கு |
| 4 | கைத்துளைக் கருவி (Hand Boring Set) | ரூ. 30/- ஒரு மீட்டருக்கு |
| 5 | பாறை தகர்க்கும் கருவி (Rock Blasting unit) | ரூ. 250/- ஒரு வெடிப்பிற்கு |
| 6 | நில நீர் ஆய்வுக் கருவி (Resistivity Meter) | ரூ. 500/- ஒரு ஆய்விற்கு |
| 7 | மின்னியல் ஆய்வுக் கருவி (Electrical Logger) | ரூ. 1,000/- ஒரு குழாய் கிணறுக்கு |

**குறிப்பு :**

சிறுபாசனத் திட்ட இயந்திரங்களுக்கு தேவையான எரிபொருள் (டீசல்), வேலையாட்கள், குழாய்கள், கூழாங்கற்கள் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வதற்கான வாகனச் செலவு ஆகியவை சம்பந்தப்பட்ட விவசாயிகளைச் சார்ந்தது.


மண் தள்ளும் இயந்திரம்



டிராக்டர்


சக்கர வகை நெல் அறுவடை இயந்திரம்


டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம்


சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம்


டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம்


மினி டிராக்டர்


கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம்


சுழல் விசைத்துளைக் கருவி


பெர்குஷன் துளைக் கருவி


சிறு விசைத்துளைக் கருவி


கைத்துளைக் கருவி


பாறை தகர்க்கும் கருவி



நில நீர் ஆய்வுக் கருவி


மின்னியல் ஆய்வுக் கருவி

### 2. தரிசு நிலங்களில் சிறுதானிய சாகுபடிக்கு உழவு மேற்கொள்ள மானியம் வழங்குதல்

தமிழ்நாட்டில் சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, குதிரைவாலி மற்றும் பனிவரகு போன்ற அனைத்து சிறுதானியங்களின் பரப்பு மற்றும் உற்பத்தி ஆகியவற்றை அதிகரிக்கும் பொருட்டு, தரிசுநிலங்களில் சிறுதானிய சாகுபடி செய்ய உழவு மானியம் வழங்கப்படுகிறது.

#### செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்

திருவண்ணாமலை, சேலம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், நாமக்கல், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர், தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருச்சி, கரூர், திண்டுக்கல், அரியலூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை.



விண்ணப்பிக்க

**செயல்படுத்தப்படும் பணிகள் மற்றும் மானிய விபரம்**

| வ.எண் | மேற்கொள்ளப்படும் பணிகள் | | மானிய விபரம் |
|---|---|---|---|
| 1 | டிராக்டர் - சட்டிகலப்பை மூலம் உழுதல் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 1100/- வீதம் ஒரு ஹெக்டருக்கு 5 மணி நேரம் உழுதல் | 1100 x 5 = 5500 ரூ. 5,500/- | இதில் 40% மானியமானது ஹெக்டர் ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ. 5,400/- பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். |
| 2 | டிராக்டர் - கொத்து கலப்பை மூலம் உழுதல் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 1100/- வீதம் ஒரு ஹெக்டருக்கு 3 மணி நேரம் உழுதல் | 1100 x 3 = 3300 ரூ. 3,300/- | |
| 3 | டிராக்டர் - சுழற்கலப்பை மூலம் உழுதல் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 1200/- வீதம் ஒரு ஹெக்டருக்கு 4 மணி நேரம் உழுதல் | 1200 x 4 = 4800 ரூ. 4,800/- | |
| | மொத்தம் | ரூ. 13,600/- | |

**குறிப்பு :-** தேவையின் அடிப்படையில் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு மட்டும் செய்து முடிக்கப்பட்ட பரப்பளவின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட 40% மானியத்தொகை கணக்கிடப்படும்.

**மானியம் பெற விண்ணப்பிக்கத் தேவைப்படும் ஆவணங்கள்**

- விவசாயியின் ஆதார் அட்டை நகல்
- நிலச்சான்றிதழ் சிட்டா, பட்டா மற்றும் நிலவரைபடம்
- வங்கிகணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல்
- சிறுதானிய சாகுபடி மேற்கொள்வதற்கான உறுதிமொழி படிவம்

பயன்பெற விரும்பும் விவசாயிகள் அருகிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலகத்தை அணுகி பயன் பெறலாம்.



தரிசு நிலங்களில் உழவு பணிகள்

## 3. மானியத்தில் மின்மோட்டார் பம்பு செட்டுகள் வழங்குதல்

வேளாண்மையில், பயிர் உற்பத்தியை அதிகரிக்க, நிலத்தடி நீர் பாசனத்தில் மின் மோட்டார் பம்புசெட்டு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. திறன்குறைந்த மின் மோட்டார் பம்புசெட்டுகளை தொடர்ந்து பயன்படுத்துவதால், மின் நுகர்வு அதிகமாகி, பயிருக்கு நீர் பாய்ச்சுவதற்கான நேரமும் அதிகரிக்கிறது. மேலும், மின் மோட்டார்கள் வழக்கமான நேரத்தை விட அதிகமாக இயங்குவதால், அதிக வெப்பம் காரணமாக மோட்டாருக்கு சேதம் ஏற்படுவதோடு, மின்மாற்றியும் (டிரான்ஸ்பார்மர்) அதிக சுமை ஏற்றப்பட்டு சேதமடைகிறது.

திறந்தவெளி கிணற்றில் நீர்மூழ்கி பம்புசெட்டு நிறுவுதல்



தமிழகத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் சிறு, குறு விவசாயிகள் ஆவர். பழைய திறன் குறைந்த பம்புசெட்டுகளை மாற்றி அமைக்க முடியாத நிலையில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, இத்திட்டத்தின் மூலம், புதிய 4 நட்சத்திர தரம் கொண்ட மின் மோட்டார் பம்புசெட்டுகளை வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது. புதிய கிணறுகளை உருவாக்கும் விவசாயிகளுக்கும், திறன்குறைந்த பழைய மின் மோட்டார் பம்புசெட்டுகளை மாற்ற விரும்பும் விவசாயிகளுக்கும் புதியதாக 4 நட்சத்திர தரம் கொண்ட மின் மோட்டார் பம்புசெட்டு வாங்குவதற்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. மின்சார பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் அதிகமான பாசன நீரினை குறைந்த மின்சார செலவில் இறைத்தல் ஆகிய நோக்கத்திற்காக வேளாண்மைப் பொறியியல் துறையால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**சிறப்பம்சங்கள்**

குழாய் / ஆழ்துளை கிணற்றில் நீர்மூழ்கி பம்பு செட் நிறுவுதல்



- புதிய 4 நட்சத்திர தரம் கொண்ட மின் மோட்டார் பம்புசெட்டுகளை வாங்கிட விவசாயிகளுக்கு ரூ. 15,000/- அல்லது மின் மோட்டார் பம்புசெட்டின் மொத்த விலையில் 50% இவற்றுள் எது குறைவோ அத்தொகை விவசாயிகளின் வங்கிக்கணக்கில் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.
- பழைய பம்புசெட்டுகளுக்கு மாற்றாக புதிய 4 நட்சத்திர தரம் கொண்ட மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வழங்குதல்.
- புதிதாக உருவாக்கப்பட்ட கிணறுக்கு புதிய 4 நட்சத்திர தரம் கொண்ட மின் மோட்டார் பம்புசெட்டுகள் வழங்குதல்.
- இந்த திட்டத்தில் சிறு, குறு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**தகுதி வரம்பு**

- திறன் குறைந்த பழைய மின் மோட்டார் பம்புசெட்டுகளை மாற்றவும்,
- மின்சார வாரியத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட குதிரைத்திறன் அல்லது அதற்குக் குறைவான குதிரைத் திறன் கொண்ட திறன்மிகு பம்பு செட்டுகள் வாங்கவும் மானியம் வழங்கப்படுகிறது.
- புதிதாக ஆழ்துளை கிணறு / குழாய் கிணறு / திறந்த வெளி கிணறு அமைத்து, சொந்தமாக மின் இணைப்பு பெற்ற விவசாயிகள்,
- 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாயிகள்
- ஏற்கனவே தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் நுண்ணீர்ப் பாசன அமைப்பு நிறுவியுள்ள விவசாயிகள் மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் நுண்ணீர்ப் பாசன அமைப்பு நிறுவிட விருப்பமுள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுடையவர் ஆவார்.

**விண்ணப்பம் பதிவு செய்தல் மற்றும் மானியம் பெறுவதற்கான வழிமுறைகள்**

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தாங்களாகவே உழவர் செயலி மூலமாகவோ https://play.google.com/store/apps/details?id=agri.tnagri&hl=en_IN&gl=US அல்லது நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பு (MIMIS) என்ற இணையதளம் மூலமாகவோ http://tnhorticulture.tn.gov.in:8080/Subsidy/ApplySubsity/ விண்ணப்பித்து தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், வட்டாரங்களில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவிப் பொறியாளர் (வே.பொ) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ) அவர்களை நேரில் உரிய ஆவணங்களுடன் தொடர்பு கொண்டு, இணையம் வழியாக பதிவேற்றம் செய்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

**மானியம் பெறுவதற்கு தேவைப்படும் ஆவணங்கள்**

**i) ஏற்கனவே தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் நுண்ணீர்ப் பாசன அமைப்பு நிறுவப்படாத விவசாயிகளுக்கு,**

(அ) ஆதார் அட்டையின் நகல்
(ஆ) புகைப்படம்
(இ) வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகல்
(ஈ) சாதிச் சான்றிதழின் நகல் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்ந்தவராயிருப்பின்)
(உ) சிறு, குறு விவசாயிக்கான சான்றிதழ் (5 ஏக்கர் வரை நிலம் உள்ளது என வட்டாட்சியர் சான்று இணைக்கப்பட வேண்டும்)
(ஊ) நிலம் சம்பந்தமான சிட்டா மற்றும் கிணறு விபரத்துடன் கூடிய அடங்கல்
(எ) மின் இணைப்பு (Service Connection) சான்றிதழ் நகல்
(ஏ) உத்தேச விலைப்பட்டியல்

**ii) ஏற்கனவே தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் மானியத்தில் நுண்ணீர்ப் பாசனம் நிறுவியுள்ள விவசாயிகளுக்கு**

(அ) மின் இணைப்பு (Service Connection) சான்றிதழ் நகல்
(ஆ) உத்தேச விலைப்பட்டியல்

- வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவிப் பொறியாளர் (வே.பொ) / இளநிலை பொறியாளர் (வே.பொ) சம்பந்தப்பட்ட விவசாய நிலங்களில் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்வர்.
- மூதுரிமை அடிப்படையில் சம்பந்தப்பட் விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட 4 நட்சத்திர தரத்திற்கு குறைவில்லாமல் உள்ள பல்வேறு நிறுவனங்களின் மின்மோட்டார் பம்புசெட்டுகளின் மாடல் மற்றும் நிறுவனத்தினை தங்களது முழு விருப்பத்தின் பேரில் தேர்வு செய்து கொள்ளலாம்.



குழாய்/ஆழ்துளை கிணற்றில் நீர்மூழ்கி பம்பு செட்டு நிறுவுதல்

## 4. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்



மின் கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டு

விவசாயிகள் நீர்ப் பாசனத்திற்கான மின்சாரத் தேவையினை பெறுவதற்கு, முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின்கீழ் மின் கட்டமைப்புடன் சாராத, தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் ஒன்றிய அரசின் வரையறுக்கப்பட்ட விலையில் அரசு மானியத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது.

சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் மூலம் மின் இணைப்பின்றி பகலில் சுமார் 8 மணிநேரம் வரை பாசனத்திற்கான தடையில்லா மின்சாரத்தினை பெற முடியும்.

**தகுதி வரம்பு**

- மின் இணைப்பு இல்லாத, பாசன ஆதாரமுள்ள தனிநபர் விவசாயிகள்
- மின் இணைப்பு இல்லாத, பாசன வசதிக்கான சமுதாயக் கிணறு அமைத்துள்ள விவசாய குழுக்கள்

புதிதாக ஏற்படுத்தப்படும் பாசனத்திற்கான கிணறுகள், நிலநீர் பாதுகாப்பான குறுவட்ட பகுதிகளில் (Safe Firka) இருத்தல் வேண்டும். இதர பகுதிகளில் ஏற்கனவே உள்ள பாசன ஆதாரத்தில் டீசல் என்ஜின் பயன்படுத்தி வரும் பட்சத்தில், அதற்கு மாற்றாக இத்திட்டத்தின்கீழ் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை அமைத்துக்கொள்ளலாம்.

**மானிய விபரம்**

இத்திட்டத்தின் மூலம் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளுக்கு 70% மானியத்திலும் (மாநில அரசு 40%, ஒன்றிய அரசு 30%) இதர விவசாயிகளுக்கு 60% மானியத்திலும் (மாநில அரசு 30%, ஒன்றிய அரசு 30%) அமைத்துத் தரப்படுகிறது.

மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 10% மானியம் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

**விலை விபரம்**

இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் பல்வேறு வகையான சூரிய சக்தி பம்புசெட்டுகளுக்கான மொத்த விலை, மானிய விபரங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு :

### மின் கட்டமைப்புடன் சாராத, தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளுக்கான விலை விபரங்கள்

| வ. எண் | சூரிய சக்தி பம்புசெட்டு வகைகள் | மொத்த விலை (ரூ.) | மானியம் (ரூ.) | | விவசாயிகளின் பங்களிப்பு (ரூ) | |
|---|---|---|---|---|---|---|
| | | | சிறு/குறு/ஆதிதிராவிடர்/பழங்குடியினர் | இதர விவசாயிகள் | சிறு/குறு/ஆதிதிராவிடர்/பழங்குடியினர் | இதர விவசாயிகள் |
| **நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள் (Submersible Pumps - Water Filled and Oil Filled)** | | | | | | |
| 1 | 5 HP AC/DC | 3,14,088 | 2,05,450 | 1,76,100 | 1,08,638 | 1,37,988 |
| 2 | 7.5 HP AC/DC | 4,42,113 | 2,78,464 | 2,38,684 | 1,63,649 | 2,03,429 |
| 3 | 10 HP AC/DC | 5,41,347 | 2,78,464 | 2,38,684 | 2,62,883 | 3,02,663 |
| 4 | 12.5 HP AC/DC | 6,79,955 | 2,78,464 | 2,38,684 | 4,01,491 | 4,41,271 |
| 5 | 15 HP AC/DC | 8,19,132 | 2,78,464 | 2,38,684 | 5,40,668 | 5,80,448 |
| **தரைமட்டத்தில் அமைக்கும் பம்புசெட்டு அமைப்புகள் (Surface Pump)** | | | | | | |
| 1 | 3 HP AC/DC | 2,15,537 | 1,33,366 | 1,14,314 | 82,171 | 1,01,223 |
| 2 | 5 HP AC/DC | 3,12,381 | 2,05,450 | 1,76,100 | 1,06,931 | 1,36,281 |
| 3 | 7.5 HP AC/DC | 4,39,154 | 2,78,464 | 2,38,684 | 1,60,690 | 2,00,471 |

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு/குறு விவசாயிகளுக்கான கூடுதல் 10% மானிய விபரம்

| வ. எண் | சூரிய சக்தி பம்புசெட்டு வகைகள் | மொத்த விலை (ரூ.) | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு/குறு விவசாயிகளுக்கான கூடுதல் மானியம் (ரூ.) | விவசாயிகளின் பங்களிப்பு தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| **நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள் (Submersible Pumps - Water Filled and Oil Filled)** | | | | |
| 1 | 5 HP AC/DC | 3,14,088 | 2,34,800 | 79,288 |
| 2 | 7.5 HP AC/DC | 4,42,113 | 3,18,245 | 1,23,868 |
| 3 | 10 HP AC/DC | 5,41,347 | 3,18,245 | 2,23,102 |
| 4 | 12.5 HP AC/DC | 6,79,955 | 3,18,245 | 3,61,710 |
| 5 | 15 HP AC/DC | 8,19,132 | 3,18,245 | 5,00,887 |
| **தரைமட்டத்தில் அமைக்கும் பம்புசெட்டு அமைப்புகள் (Surface Pump)** | | | | |
| 1 | 3 HP AC/DC | 2,15,537 | 1,52,418 | 63,119 |
| 2 | 5 HP AC/DC | 3,12,381 | 2,34,800 | 77,581 |
| 3 | 7.5 HP AC/DC | 4,39,154 | 3,18,245 | 1,20,909 |

**குறிப்பு :**

1. ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தினால் வரையறுக்கப்பட்ட விலையின் அடிப்படையில் மானியம் வழங்கப்படுகிறது.
2. தனிப்பட்ட விவசாயிகளுக்கு 7.5 குதிரை திறனுக்கும் அதிகமான குதிரை திறன் கொண்ட சூரிய சக்தி பம்பு செட்டுகளுக்கு 7.5 குதிரை திறன் கொண்ட சூரிய சக்தி பம்பு செட்டுகளுக்கான மானியமே வழங்கப்படும்.

### சூரிய சக்தி பம்புசெட்டு அமைப்பிற்கான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் மாடல்கள்

| வ. எண் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் | சூரிய சக்தி பம்புசெட் அமைப்பிற்கான வகை |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஸ்ரீ சாவிட்டிர் சோலார் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்<br>கைபேசி எண் : 9949033677 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>3 HP AC / DC, 5 HP AC/DC, 7.5 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Oil Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC |
| 2 | திருவாளர்கள். சூர்யா இன்டர்நேசனல் எண்டர் பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், ஒடிசா<br>கைபேசி எண் : 8940379171<br>7440012168 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>3 HP AC / DC, 5 HP AC/DC, 7.5 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Oil Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC |
| 3 | திருவாளர்கள். ஜே.ஜே.பி.வி.சோலார் லிமிடெட், இராஜ்கோட், குஜராத்<br>கைபேசி எண் : 9599594507<br>9904821073 | நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC |
| 4 | திருவாளர்கள். ஜுன்னா சோலார் சிஸ்டம்ஸ் லிமிடெட், ஹைதராபாத்<br>கைபேசி எண் : 7093631818<br>7680889911 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>3 HP AC / DC, 5 HP AC/DC, 7.5 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Oil Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC |
| 5 | திருவாளர்கள். ரோட்டோமேக் மோட்டார்ஸ் மற்றும் கண்ட்ரோல்ஸ் பிரைவேட் லிமிடெட், ஆனந்த், குஜராத்<br>கைபேசி எண் : 9952360955<br>9227110023 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>3 HP AC / DC, 5 HP AC/DC, 7.5 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC |
| 6 | திருவாளர்கள். நீட்டி யுரோ ஏசியா சோலார் எனர்ஜி, காந்திநகர், குஜராத்<br>கைபேசி எண் : 7373705842<br>9909595442 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>3 HP AC / DC, 5 HP AC/DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC |
| 7 | திருவாளர்கள். ரிச் பைடோகோ பிரைவேட் லிமிடெட், சென்னை<br>கைபேசி எண் : 9787757578 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>3 HP AC / DC, 5 HP AC/DC, 7.5 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC |
| 8 | திருவாளர்கள். சன்கிரேஸ் எனர்ஜி சொலுயூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்<br>கைபேசி எண் : 9440088015 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>3 HP AC / DC, 5 HP AC/DC, 7.5 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC, 12.5 HP AC/DC and 15 HP AC / DC |
| 9 | திருவாளர்கள். ஸ்வெலெக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட், சென்னை<br>கைபேசி எண் : 9962247478<br>7810970008 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>5 HP AC/DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP AC/DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC |
| 10 | திருவாளர்கள். சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்<br>கைபேசி எண் : 7305097306 | தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் **(Surface Pump)**<br>3 HP AC / DC, 5 HP AC/DC, 7.5 HP AC / DC<br>நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP DC, 7.5 HP AC / DC, 10 HP AC / DC |
| 11 | திருவாளர்கள். அதீதி சோலார் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்<br>கைபேசி எண் : 8978854777 | நீர்மூழ்கி மோட்டார் பம்புசெட்டு அமைப்புகள்<br>**(Submersible Pumps-Water Filled)**<br>5 HP DC, 7.5 HP DC |

### இத்திட்டத்தின் கீழ் பயன்பெற

1. சூரிய சக்தி பம்புசெட்டுகளை பெற விரும்பும் விவசாயிகள் இலவச மின் இணைப்புக் கோரி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் **(TNAGEGO)** பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை.
2. இத்திட்டத்தின் கீழ் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை அமைத்திட விண்ணப்பிக்கும் போது, சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை நுண்ணீர் பாசனத்துடன் இணைத்திட உறுதிமொழி அளித்திட வேண்டும்.
3. வேளாண் பணிகளுக்கு ஆற்றுப்படுகை மற்றும் நீர் நிலைகளில் இருந்து 200 மீட்டருக்குள் மற்றும் கான்கிரீட், காரை இடப்படாத கால்வாய்களிலிருந்து 50 மீட்டருக்குள் நிலத்தடி நீரை இறைப்பதற்கு சூரிய சக்தி பம்புசெட்டு அமைக்கப்பட வேண்டுமானால் நீர்வள ஆதாரத் துறையிடமிருந்து தடையில்லாத சான்று பெற வேண்டும். மேற்படி வரம்பிற்குள் உள்ள நீர் ஆதாரங்களுக்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை அமைத்திட விண்ணப்பிக்கும் போது நீர்வள ஆதாரத்துறையின் தடையில்லா சான்றினை இணைத்திட வேண்டும்.
4. விண்ணப்பிக்க : இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விவசாயிகள் நேரடியாக **https://pmkusum.tn.gov.in** என்ற இணையதளத்தை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம் அல்லது விவசாயிகள் நேரடியாக அந்தந்த வட்டாரங்களில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி பொறியாளர் (வே.பொ) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ) களை உரிய ஆவணங்களுடன் தொடர்பு கொண்டு மேற்படி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

### திட்ட செயலாக்கம்



விவசாயிகளிடமிருந்து சூரிய சக்தி பம்புசெட் அமைப்பதற்கு அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் விபரம் பெறப்பட்டவுடன், தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் தீர்மானிக்க வேளாண்மைப் பொறியியல் துறை அதிகாரிகளுடன் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திற்கு விவசாயிகளின் பங்களிப்பாக வழங்க வேண்டிய தொகைக்கான வரைவோலை எடுக்க வேண்டிய விபரம், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும். விவசாயிகளின் பங்களிப்புக்கான வரைவோலை பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட உபகோட்ட உதவி செயற் பொறியாளர் (வே.பொ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அந்நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டு, விவசாயிகளின் நிலத்தில் சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கப்படும்.

சூரிய சக்தி பம்புசெட்டு அமைக்கப்பட்டு திருப்திகரமாக நீர் இறைப்பதை, விவசாயி மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் உறுதி செய்தபின், மானியத் தொகை சூரிய சக்தி பம்புசெட்டு நிறுவிய நிறுவனத்திற்கு வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்படும்.

## 5. சூரிய கூடார உலர்த்திகள் மானியத்தில் அமைத்தல்



சூரிய கூடார உலர்த்தி

விவசாயிகள் விளைபொருட்களில் அறுவடைக்குப் பிறகு ஏற்படும் இழப்பினைக் குறைத்து, சூரிய சக்தியைப் பயன்படுத்தி சுகாதாரமான முறையில் மாசுபடாமல், விரைவாக உலரவைத்து தரத்தினை உறுதி செய்து, விளைபொருட்களின் இருப்பு காலத்தை அதிகரித்து, மதிப்பு கூட்டி அதிக விலைக்கு விற்பனை செய்து இலாபம் ஈட்டிட ஏதுவாக, பாலிகார்பனேட் தகடுகள் வேய்ந்த பசுமை குடில், வகையிலான சூரிய கூடார உலர்த்திகள் விவசாயிகளுக்கு மானியத்துடன் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அமைத்துக் தரப்படுகிறது.

- சூரிய கூடார உலர்த்தியில் வேளாண் விளைபொருட்களை உலர வைப்பதன் மூலம் அவற்றை உலர்த்துவதற்கான கால அளவு, கூலியாட்கள் செலவு, அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு ஆகியவை குறைகிறது.
- விளைபொருட்களை சுகாதாரமான முறையில் இயற்கை தன்மை மாறாமல் உலர்வதால் அவற்றின் தரம் உறுதி செய்யப்படுகிறது. மேலும், பூஞ்சைக்காளான் படிவதும் தவிர்க்கப்படுகிறது.
- சூரிய கூடார உலர்த்தியில் கொப்பரை தேங்காய் பூஞ்சை தொற்றின்றி உலர்வதால், உடலுக்கு தீங்கு விளைவிக்கும் சல்பர் போன்ற வேதிப் பொருட்களை பயன்படுத்த அவசியமில்லை.

### பயன்படுத்தும் வழிமுறைகள்

- பழம், காய்கறி போன்ற உலர்த்தப்பட வேண்டிய வேளாண் விளைபொருட்களை சூரிய கூடார உலர்த்தியின் உள்ளே ட்ரேய்களில் (Trays) வைக்க வேண்டும்.
- பொருட்களை வைத்தபின் சூரிய கூடார உலர்த்தியின் கதவை மூட வேண்டும்.
- வெப்பம் மற்றும் ஈரப்பதக் கட்டுபாட்டுக்கருவியை (Temperature and Humitidy Controller) பகலில் இயக்க ரோட்டரி சுவிட்சை சோலார் இயக்கும் (on Mode) நிலையிலும், இரவில் பேட்டரி (Battery) மூலம் இயக்க ரோட்டரி சுவிட்சை எலக்ட்ரிக் இயக்கும் (230V), AC on Mode) நிலையிலும் வைக்க வேண்டும்.
- இயக்கிய பின் வெப்பம் மற்றும் ஈரப்பதக் கட்டுப்பாட்டுக்கருவி (Temperature Humidity Contorl) கூடார உலர்த்தியின் உள்ளே உள்ள வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தின் அளவினைக் காட்டும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- உலர வைக்கக்கூடிய விளைபொருட்களுக்கு ஏற்றவாறு, தேவையான வெப்பம் மற்றும் ஈரப்பதத்தின் அளவை, வெப்பம் மற்றும் ஈரப்பத கட்டுப்பாட்டுக் (Temperarue and Humidity controller) கருவியில் செட்டிங் செய்ய வேண்டும்.
- சூரிய கூடார உலர்த்தியின் வெண்டிலேட்டரினை தேவைக்கேற்றவாறு திறக்க வேண்டும்.
- சூரிய கூடார உலர்த்தியின் உள்ளே உள்ள வெப்பத்தின் காரணமாக பொருட்கள் உலர ஆரம்பிக்கும் பொருட்கள் உலர்ந்தபின், பொருட்களை வெளியே எடுத்து விடலாம்,

### வேளாண் விளை பொருட்களான

- கொப்பரை தேங்காய், நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள்
- வாழைப்பழம், நெல்லிக்கனி உள்ளிட்ட பழவகைகள்
- மிளகாய், கிராம்பு, இஞ்சி உள்ளிட்ட வாசனைப் பொருட்கள்
- முருங்கை இலை, கருவேப்பிலை, மூலிகை செடி இலைகள், பாக்கு, தேயிலை, காப்பிக் கொட்டை ஆகியவற்றை சுகாதாரமான முறையில் உலர்த்தி, மதிப்புக் கூட்டி அதிக விலைக்கு விற்பனை செய்து விவசாயிகள் அதிக இலாபம் பெற இயலும்.
- விவசாயிகளின் தேவைக்கேற்பவும், இடவசதிக்கேற்பவும் சூரிய கூடார உலர்த்திகள் 400 முதல் 1000 சதுர அடி பரப்பளவு வரை அமைத்துத் தரப்படுகிறது.

  வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து விவசாயிகள் தங்களுக்கான நிறுவனத்தினை தேர்வு செய்து கொள்ளலாம்.

| வ. எண். | சதுர அடி | ஒரு சதுர அடிக்கு (ரூ.) | மொத்த விலை (ரூ.) | ஆதிதிராவிடர், பழங்குடியினர் சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு 60 சதவீத மானியம் (ரூ.) | இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் (ரூ.) | விவசாயிகளின் பங்களிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அதிதிராவிடர், பழங்குடியினர் சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு (ரூ.) | இதர விவசாயிகளுக்கு (ரூ.) |
| 1 | 400 | 842 | 3,36,800 | 2,02,080 | 1,68,400 | 1,34,720 | 1,68,400 |
| 2 | 601 | 813 | 4,88,613 | 2,93,168 | 2,44,307 | 1,95,445 | 2,44,306 |
| 3 | 801 | 786 | 6,29,586 | 3,50,000 | 3,00,000 | 2,79,586 | 3,29,586 |
| 4 | 1000 | 786 | 7,86,000 | 3,50,000 | 3,00,000 | 4,36,000 | 4,86,000 |

### குறிப்பு

- சூரிய கூடார உலர்த்திகளில் பயன்படுத்த தேவைப்படும் ட்ரேய்ஸ் (Traus) மற்றும் ட்ராலிஸ் (Trolleys) விவசாயிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில் 400 முதல் 600 சதுர அடிவரையிலான பரப்பிற்கு ரூ.1,62,368/-ம் 601 முதல் 800 சதுர அடி வரையிலான பரப்பிற்கு ரூ.2,43,552/-ம் 801 முதல் 1000 சதுர அடி வரையிலான பரப்பிற்கு ரூ.3,24,736/-ம் கூடுதல் விலையாக கணக்கிடப்பட்டு, அதற்கேற்ப மானியம் வழங்கபடும்.
- நிர்ணயிக்கப்பட்ட விலையானது வடிவமைப்பு, விநியோகம், சிவில் கட்டமைப்பு, சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்த விலையாகும்.

### அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்

1. திருவாளர்கள். ஏடிஆர் சோலார், மதுரை, கைப்பேசி எண் : 9344453444
2. திருவாளர்கள். போகசன் எனர்ஜி சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் கைப்பேசி எண் : 9842291069
3. திருவாளர்கள். ஆதி சோலார். கோயம்புத்தூர், கைப்பேசி எண் : 9360455155

மேற்கண்ட நிறுவனங்களிலிருந்து விவசாயிகள் / விவசாயக் குழுக்கள் தாங்கள் விரும்பும் நிறுவனத்தினை தங்களின் முழுவிருப்பத்தின்பேரில் தேர்வு செய்து கொள்ளலாம்.

### மானிய விபரம்

சூரிய கூடார உலர்த்திகள் நிறுவும் செலவில் தங்கள் பங்களிப்பு தொகையினை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயரில் செலுத்தி விருப்பமுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயக் குழுக்களுக்கு கீழ்க்கண்ட மானியத்துடன் அமைத்துத் தரப்படுகிறது.

1. சிறு, குறு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்த விலையில் 60% அல்லது ரூ.3.50 இலட்சம் இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படும்.
2. இதர விவசாயிகள் மற்றும் விவசாயக் குழுக்களுக்கு மொத்த விலையில் 50% அல்லது ரூ.3.00 இலட்சம் இவற்றில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படும்.




விண்ணப்பிக்க

## 6. சூரியசக்தி மின்வேலி மானியத்தில் அமைத்தல்

விவசாயிகள் தங்கள் விளைநிலங்களிலுள்ள பயிர்களை சேதப்படுத்தும் ஆடு, மாடு, காட்டுப்பன்றி, காட்டெருமை, மான் மற்றும் யானை போன்ற விலங்குகளிடமிருந்து தங்களது பயிர்களை பாதுகாக்கவும், வனவிலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு இடையேயான மோதலை தவிர்க்கவும் வழிவகை செய்திட வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் சூரியசக்தி மின்வேலி அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- சூரியசக்தி மின்வேலியானது உயர் மின்னழுத்தம் மற்றும் குறுகிய கால மின்சார அதிர்ச்சிகளைக் கொண்டு செயல்படுவதால் விலங்குகளுக்கு உயிர் ஆபத்தினை ஏற்படுத்தாது.
- **அமைப்பு** : 5 வரிசை, 7 வரிசை, 10 வரிசை மின் கம்பிகளைக் கொண்ட சூரிய சக்தி மின்வேலி அமைப்பின் இரு வகைகள்:
  - i) யானைகள் தவிர்த்த பிற விலங்குகளுக்கான சாதாரண சூரிய சக்தி மின்வேலி அமைப்பு.
  - ii) யானைகளை விரட்டிட கூடுதலாக “தொங்கும் சூரிய சக்தி மின்வேலி” அமைப்பு
- சூரிய சக்தி மின்வேலி அமைப்பானது எனர்ஜைசர், பேட்டரி மற்றும் சூரிய தகடு, வேலி கம்பிகள், இடைநிலை / கடைநிலை போஸ்ட், எர்த்திங் அமைப்பு மற்றம் அலாரம் போன்றவற்றை உள்ளடக்கியது.
- சூரிய சக்தி மின்வேலியில் எதிர்பாராத விதமாக ஏதேனும் விலங்குகள், தாவரங்கள், மற்றும் மனிதர்கள் சிக்கிக் கொண்டால் இந்த அமைப்பு முழுவதும் தன்னிச்சையாகவும் செயல் இழந்து சம்பந்தப்பட்ட விவசாயிகளின் கைபேசிக்கு தகவல் (GSM) சென்றடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்களின் பட்டியலில் இருந்து தங்களுக்கான நிறுவனத்தினை விவசாயிகளே தங்களது முழு விருப்பத்தின் பேரில் தேர்வு செய்து கொள்ளலாம்.

### சிறப்பம்சங்கள்

- 50% மானியம்
- பேட்டரி அமைப்புடன் கூடியது
- பாதுகாப்பானது
- 10 வருட உத்தரவாதம்
- விலங்குகள் மின்வேலியில் சிக்கினால் கைபேசி மூலம் அறிதல்

### மானிய விபரம்

- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டர் பரப்பிற்கு, 566 மீட்டர் வரை மானியம் வழங்கப்படும். தனிப்பட்ட விவசாயிகளுக்கு 50% மானியமாக வழங்கப்படும்.
- இந்த திட்டத்தில் சிறு, குறு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.



தொங்கும் சூரிய சக்தி மின்வேலி அமைப்பு

- வேலிகள் அமைக்கப்படும் விளை நிலங்களின் எல்லைப் பகுதிகளில் உள்ள முட்புதர்கள் மற்றும் தாவரங்கள் சுத்தம் செய்து தருவது விவசாயிகளின் பொறுப்பாகும்.
- வேலிகள் அமைக்கப்படும் வயலின் ஒழுங்கற்ற எல்லைகளுக்கும், வளைந்து நெளிந்து அமைக்கும் சூரிய மின்வேலிக்கு தேவைப்படும் கூடுதல் குழாய்களுக்குமான (Corner Post) செலவினை விவசாயிகளே தங்களின் பங்களிப்பாக செலுத்த வேண்டும்.
- வனப்பகுதியை ஒட்டியுள்ள வயல்களில் சூரிய மின்வேலி அமைக்க வனத்துறையிடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

### 2024-25 ஆம் ஆண்டில் சூரிய மின் வேலி வடிவமைத்து நிறுவி கொடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட விலை விபரம்

(அதிகபட்சமாக 2 ஹெக்டர், 566 மீட்டர் நீளத்திற்கு யானைகளைத் தவிர்த்து அனைத்து விலங்குகளுக்குமானது)

| வ. எண். | வேலிக் கம்பிகள் வரிசை | மொத்த விலை (ரூ.) | 50% மானியம் (ரூ.) | விவசாயிகளின் பங்களிப்பு (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | 5 | 2,26,489 | 1,13,245 | 1,13,244 |
| 2 | 7 | 2,44,948 | 1,22,474 | 1,22,474 |
| 3 | 10 | 2,73,294 | 1,36,647 | 1,36,647 |

**குறிப்பு :** விவசாயிகள் தாங்கள் அமைக்கும் சூரிய மின் வேலிக்கு கேட்டுகள் மற்றும் கண்காணிப்பு உபகரணங்கள் (GSM Alert) அமைக்கும் பட்சத்தில் கூடுதலாக ரூ. 29,824 செலுத்த வேண்டும்.

(தொங்கும் சூரிய மின்வேலி அமைப்புகளுக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டர், 566 மீட்டர் நீளத்திற்கு யானைகள் உள்ளிட்ட அனைத்து விலங்குகளுக்குமானது)

| வ. எண். | வேலிக் கம்பிகள் வரிசை | மொத்த விலை (ரூ.) | 50% மானியம் (ரூ.) | விவசாயிகளின் பங்களிப்பு (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | 5 | 2,89,819 | 1,44,910 | 1,44,909 |
| 2 | 7 | 3,09,888 | 1,54,944 | 1,54,944 |
| 3 | 10 | 3,39,825 | 1,69,913 | 1,69,912 |

**குறிப்பு :** விவசாயிகள் தாங்கள் அமைக்கும் சூரிய மின் வேலிக்கு கேட்டுகள் மற்றும் கண்காணிப்பு உபகரணங்கள் (GSM Alert) அமைக்கும் பட்சத்தில் கூடுதலாக ரூ. 29,824 செலுத்த வேண்டும்.

**அங்கீரிக்கப்பட்ட நிறுவனங்கள்**

1. திருவாளர்கள். ஓமேகா சோலார் சிஸ்டம்ஸ், **1/1C-16** சக்கரையார் நகர், வரதராஜபுரம், சிங்க நல்லூர், கோயம்புத்தூர் 641015.
   **தொடர்புக்கு :** கே. முத்துமணி, 9842266151
2. திருவாளர்கள். ஆதி சோலார் சொலுஷன்ஸ், எண் 8, வெற்றி விநாயகர் தெரு, விலாங்குறிச்சி, சேரண்மா நகர், கோயம்புத்தூர் 641035.
   **தொடர்புக்கு :** சுதர்ஷன், 9360455155
3. திருவாளர்கள். சன்மார்க் சோலார் இன்டஸ்டீரீஸ் எண் 488 கௌண்டர் காம்ப்லெக்ஸ், திருச்சி ரோடு, இராமநாதபுரம், கோயம்புத்தூர் - 641045
   **தொடர்புக்கு :** செல்லமுத்து, 9965288611

**விண்ணப்பிக்க**

**பராமரிப்பு**

- சூரிய சக்தியால் இயங்கும் மின்வேலிகள் அமைத்தபின் வேலி கம்பிகளுக்கு கீழே உள்ள புற்கள் மற்றும் புதர்கள் அவ்வப்போது அகற்றப்பட வேண்டும்.

## 7. வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டம்



பவர் டில்லர்

உலகத்தின் உயிர்த்தொழிலான வேளாண்மையை சிறப்பாக மேற்கொண்டு, வேளாண் உற்பத்தியைக் பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், வேளாண் பணியாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, வேளாண் பணிகளை குறைந்த செலவில் உரிய காலத்தில் மேற்கொள்ளவும், நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் தேவை ஆகியவற்றை கருத்தில் கொண்டு வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத்திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சிறு, குறு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விலையில் 50% மற்றும் இதர பயனாளிகளுக்கு 40% அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மானியத்தொகை, இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

**பல்வேறு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கு அரசால் வழங்கப்படும் அதிகபட்ச மானிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண். | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதிதிராவிடர், பழங்குடியினர் சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர பயனாளிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| 1 | டிராக்டர் 2 வீல் டிரைவ் (20 **PTO** குதிரைத்திறன் வரை) | 2.00 | 50% | 1.60 | 40% |
| 2 | டிராக்டர் 4 வீல் டிரைவ் (20 **PTO** குதிரைத்திறன் வரை) | 2.25 | 50% | 1.80 | 40% |
| 3 | டிராக்டர் 2 வீல் டிரைவ் (20 குதிரைத்திறனுக்கு மேல் 40 **PTO** குதிரைத்திறன் வரை) | 2.50 | 50% | 2.00 | 40% |
| 4 | டிராக்டர் 4 வீல் டிரைவ் (20 குதிரைத்திறனுக்கு மேல் 40 **PTO** குதிரைத்திறன் வரை) | 3.00 | 50% | 2.40 | 40% |
| 5 | டிராக்டர் 2 வீல் டிரைவ் (40 **PTO** குதிரைத்திறனுக்கு மேல்) | 4.25 | 50% | 3.40 | 40% |
| 6. | டிராக்டர் 4 வீல் டிரைவ் (40 **PTO** குதிரைத்திறனுக்கு மேல்) | 5.00 | 50% | 4.00 | 40% |
| 7 | பவர் டில்லர் (8 குதிரைத்திறன் முதல் 11 குதிரைத்திறன் வரை) | 1.00 | 50% | 0.80 | 40% |
| 8 | பவர் டில்லர் (11 குதிரைத்திறனுக்கு மேல்) | 1.20 | 50% | 1.00 | 40% |
| 9 | நெல் அறுவடை இயந்திரம் (ட்ராக்-6 அடிக்கு மேல் உள்ள கட்டர் பார்) | 11.00 | 50% | 8.80 | 40% |
| 10 | நெல் அறுவடை இயந்திரம் (ட்ராக்-6 அடிக்கு கீழ் உள்ள கட்டர் பார்) | 7.00 | 50% | 5.60 | 40% |
| 11 | தானியங்கி நெல் அறுவடை இயந்திரம் | 8.00 | 50% | 6.40 | 40% |
| 12 | டிராக்டரால் இயங்கக்கூடிய நெல் அறுவடை இயந்திரம் (டிராக்டருடன்) | 7.25 | 50% | 5.80 | 40% |
| 13 | தானியங்கி சோளம் அறுவடை இயந்திரம் | 10.00 | 50% | 8.00 | 40% |
| 14 | கிசான் ட்ரோன் (சிறிய மற்றும் நடுத்தர வகை) | 5.00 | 50% | 4.00 | 40% |
| 15. | தானியங்கி நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் (4 வரிசை) (பின்னால் நடந்து இயங்கக்கூடியது) | 1.50 | 50% | 1.20 | 40% |
| 16 | தானியங்கி நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் (4 வரிசை மற்றும் 8 வரிசை வரை) அமர்ந்து இயங்கக்கூடியது உட்பட | 5.00 | 50% | 4.00 | 40% |
| 17 | புதர் அகற்றும் கருவி | 0.40 | 50% | 0.30 | 40% |
| 18 | தட்டை வெட்டும் கருவி (3 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள என்ஜின்/மின் மோட்டார் மற்றும் 20 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள பவர் டில்லர் மற்றும் டிராக்டரினால் இயங்கக்கூடியது) | 0.20 | 50% | 0.16 | 40% |
| 19 | விசை களையெடுக்கும் கருவி (2 குதிரைத்திறனுக்கு கீழ் உள்ள என்ஜினால் இயங்கக்கூடியது) | 0.25 | 50% | 0.20 | 40% |
| 20 | விசை களையெடுக்கும் கருவி (2 குதிரைத்திறனுக்கு மேல் உள்ள என்ஜினால் இயங்கக்கூடியது) | 0.35 | 50% | 0.30 | 40% |
| 21 | விசை களையெடுக்கும் கருவி (5 குதிரை திறனுக்கு மேல் உள்ள என்ஜினால் இயங்கக்கூடியது | 0.63 | 50% | 0.50 | 40% |
| 22 | பல்முனை பயன்பாடு கொண்ட தானியங்கி இயந்திரம் **(Self Propelled Tool bar)** அமர்ந்து இயங்கக்கூடியது | 1.40 | 50% | 1.12 | 40% |
| 23 | மின் களை எடுக்கும் கருவி | 0.63 | 50% | 0.50 | 40% |
| 24 | கழல் கலப்பை 4 அடி வரை **(Rotavator)** | 0.40 | 50% | 0.32 | 40% |
| 25 | சுழல் கலப்பை 5 அடி வரை **Rotavator)** | 0.42 | 50% | 0.34 | 40% |
| 26 | டிரெய்லர்/டிராலி (5 டன் வரை கொள்ளளவுள்ள) | 0.75 | 50% | 0.60 | 40% |
| 27 | வரப்பு செதுக்கி, சேறு பூசும் கருவி **(Bund Former-PTO operated)** | 1.50 | 50% | 1.20 | 40% |
| 28 | உளிக்கலப்பை | 0.55 | 50% | 0.45 | 40% |
| 29 | கொத்துக்கலப்பை | 0.50 | 50% | 0.40 | 40% |
| 30 | ரோட்டோ படுலர் | 0.63 | 50% | 0.50 | 40% |
| 31 | சுழல் கலப்பை 6 அடி **(Rotavator)** | 0.468 | 50% | 0.374 | 40% |
| 32 | விசை பலுகு **(PTO operated)** | 1.00 | 50% | 0.80 | 40% |
| 33 | லேசரால் இயங்கும் நிலம் சமன் செய்யும் கருவி | 2.00 | 50% | 1.60 | 40% |
| 34 | நிலப்போர்வை அமைக்கும் கருவி | 0.75 | 50% | 0.60 | 40% |
| 35 | திருப்பும் வசதி கொண்ட ஹைட்ராலிக் வார்ப்பு இறகுக் கலப்பை (2 இறகு) | 0.713 | 50% | 0.570 | 40% |
| 36 | உயர் மட்டப்பாத்தி அமைத்து விதை விதைக்கும் கருவி | 0.35 | 50% | 0.30 | 40% |
| 37 | காற்று அழுத்தத்தால் இயங்கும் விதை விதைக்கும் கருவி | 2.25 | 50% | 1.80 | 40% |
| 38 | விதையுடன் உரமிடும் கருவி (11 கொத்து) | 0.256 | 50% | 0.205 | 40% |
| 39 | ரோட்டரி மல்ச்சர் (6 அடி) | 0.78 | 50% | 0.624 | 40% |
| 40 | நிலக்கடலை தோண்டும் இயந்திரம் | 0.75 | 50% | 0.60 | 40% |
| 41 | கரும்பு சோகை உரிக்கும் இயந்திரம் | 0.75 | 50% | 0.60 | 40% |
| 42 | தென்னை ஓலை துகளாக்கும் இயந்திரம் | 0.63 | 50% | 0.50 | 40% |
| 43 | வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம் (உருளை வடிவம் கட்டுக்கு 14 முதல் 16 கிலோ வரை) | 2.00 | 50% | 1.60 | 40% |
| 44 | வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம் (உருளை வடிவம் கட்டுக்கு 16 முதல் 25 கிலோ வரை) | 5.50 | 50% | 4.40 | 40% |
| 45 | வைக்கோல் கூட்டும் கருவி | 1.50 | 50% | 1.20 | 40% |
| 46 | கதிரடிப்பான் / பல்வகைப்பயிர் கதிரடிக்கும் இயந்திரம் (மணிக்கு 4 டன்னுக்கு மேல் கதிரடிக்கும் திறன்) | 2.50 | 50% | 2.00 | 40% |
| 47 | கரும்புகரணை வெட்டும் கருவி | 0.37 | 50% | 0.296 | 40% |
| 48 | மனிதனால் இயக்கக்கூடிய விதை மற்றும் உரமிடும் கருவி | 0.10 | 50% | 0.08 | 40% |
| 49 | நேரடி நெல் விதைக்கும் கருவி 4 வரிசைக்கு மேல் | 0.04 | 50% | 0.03 | 40% |
| 50 | மனிதனால் இயக்கக்கூடிய பருத்தி பறிக்கும் கருவி (12V பேட்டரியால் இயங்கக்கூடியது) | 0.035 | 50% | 0.028 | 40% |
| 51 | மனிதனால் இயக்கக்கூடிய தெளிப்பான்கள் | 0.0075 | 50% | 0.006 | 40% |

| வ. எண். | வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர் | ஆதிதிராவிடர், பழங்குடியினர் சிறு/குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கான மானிய விவரம் | | இதர பயனாளிகளுக்கான மானிய விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்) | மானிய சதவீதம் | ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்) | மானிய சதவீதம் |
| 52 | விசை தெளிப்பான்கள் (8 முதல் 12 லிட்டர் கொள்ளளவு) | 0.031 | 50% | 0.025 | 40% |
| 53 | விசை தெளிப்பான்கள் (12 முதல் 16 லிட்டர் கொள்ளளவு) | 0.038 | 50% | 0.03 | 40% |
| 54 | விசை தெளிப்பான்கள் (16 லிட்டருக்கு மேல் கொள்ளளவு) | 0.10 | 50% | 0.08 | 40% |
| 55 | டிராக்டரால் இயங்கக்கூடிய தெளிப்பான் | 0.37 | 50% | 0.28 | 40% |
| 56 | சூரியசக்தி / மின்சக்தியால் இயங்கும் விலங்கு விரட்டும் கருவி (சோலார் பேனலுடன்) | 0.35 | 50% | 0.28 | 40% |
| 57 | சூரியசக்தி / மின்சக்தியால் இயங்கும் விலங்கு விரட்டும் கருவி | 0.25 | 50% | 0.20 | 40% |
| 58 | விளக்குப் பொறி | 0.015 | 50% | 0.012 | 40% |
| 59 | கைபேசியால் தொலைவில் இருந்து மின்சார மோட்டார் இயக்கும் கருவி | 0.07 | 50% | 0.05 | 40% |
| 60 | தேயிலை பறிக்கும் கருவி | 0.50 | 60% | 0.40 | 50% |
| 61 | நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் | 9.00 | 60% | 7.50 | 50% |

- இத்திட்டத்தில் சிறப்பு அம்சமாக நடப்பு 2024 - 25 ஆம் ஆண்டில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 4,000 பவர் டில்லர்கள், 4,000 பவர் வீடர்கள் மற்றும் 10,000 கைபேசியால் தொலையில் இருந்து மின்சார மோட்டார் இயங்கும் கருவிகள் மானியத்தில் வழங்கப்படுகிறது.

**கைபேசியால் தொலைவில் இருந்து மின்சார மோட்டார் இயங்கும் கருவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்**

1. திருவாளர்கள். செல்கான் இன்டஸ்ட்ரீஸ் ப்ரைவேட் லிமிடெட், ஈரோடு,
**தொடர்புக்கு:** திரு. மூர்த்தி 9655321216
2. திருவாளர்கள். மொபிடெக் வயர்லெஸ் சொல்யூன்ஸ் ப்ரைவேட் லிமிடெட், ஈரோடு
**தொடர்புக்கு:** திரு. தெய்வேந்திரன், 9677631759
3. திருவாளர்கள். நயாகரா சொல்யூஷன்ஸ், கோயம்புத்தூர்
**தொடர்புக்கு:** திரு. கிருஷ்ணகுமார், 7373705108 மற்றும் திரு. ரவிக்குமார், 9842505100
4. திருவாளர்கள். சுபம் ஏஜென்சிஸ், சென்னை (எல் & டி)
**தொடர்புக்கு:** திரு. சக்திவேல், 9841071705 மற்றும் செல்வி. ஷ்வேதா மோனிகா. 9790697807

**விண்ணப்பிக்க**

**நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம் மானியத்தில் வழங்குதல்**

- டிராக்டரால் இயங்கும் 10 நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள், ஒரு இயந்திரத்திற்கு அதிகபட்சம் ரூ.9 இலட்சம் என்ற வீதத்தில் ரூ.90 இலட்சம் மானியத்தில் தனிநபர் விவசாயிகள், விவசாய சுய உதவிக்குழுக்கள், விவசாய கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தொழில்முனைவோர்கள் ஆகியோருக்கு மானியத்தில் வழங்கப்படுகிறது.




**சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதல் மானியம்**

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிட 50% மானியத்துடன் கூடுதலாக 20% மானியம் மாநில நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத இதர பிரிவினை சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு தேவையான நெல்நாற்று நடவு செய்யும் கருவி மற்றும் விசைக்களையெடுக்கும் கருவிகளுக்கு, 50% மானியத்துடன் கூடுதலாக மாநில நிதியிலிருந்து 10% மானியம் சேர்த்து, 60% மானியம் வழங்கப்படுகிறது.
- மேலும் உயர் மதிப்பு வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத சிறு, குறு விவசாயிகள் அவற்றை வாடகைக்குப் பெற்று பயன் பெறும் வகையிலும், பயன்பாட்டினை ஊக்குவிக்கவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

**கரும்பு சாகுபடிக்கேற்ற இயந்திர வாடகை மையம் நிறுவுறுதல்**

கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையம், தொழில்முனைவோர் மூலம் சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து ஒவ்வொன்றும் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் 40% (அதிகபட்சமாக ரூ.60 இலட்சம் வரை) மானிய உதவியுடன் நிறுவப்பட்டு, கரும்பு விவசாயிகளுக்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் கருவிகள் குறைந்த வாடகையில் வழங்கப்படுகிறது.

## 8. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றி அதன் மூலம் நிகர சாகுபடி பரப்பினை அதிகரித்தல் மற்றும் அனைத்துத் துறை திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலமாக கிராமங்களை தன்னிறைவு வளர்ச்சி அடையச் செய்தல் முதலிய நோக்கங்களைக் கொண்டு, இத்திட்டம் 2021-22 ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராம பஞ்சாயத்துகளில் 100 சதவீத மாநில அரசின் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**செயல்படுத்தப்படும் இனங்கள்**

- இனம் 1 - பாசன வசதியில்லாத பதிவு செய்யப்பட்ட தரிசு நில தொகுப்புகளுக்கு நீர் ஆதாரங்களை (ஆழ்துளை / குழாய் / திறந்தவெளி கிணறுகள்) உருவாக்குதல்.
- இனம் 2 - பாசன வசதியில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு நீர் ஆதாரங்களை (ஆழ்துளை / குழாய் கிணறுகள்) உருவாக்குதல்.
- இனம் 3- தனிநபர் விவசாயிகளுக்கு பண்ணைக்குட்டைகள் அமைத்தல்.
- இனம் 4 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுபாட்டில் உள்ள சிறுபாசன குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்துக் கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை தூர்வாரி மேம்படுத்துதல்.
- இனம் 5 - தொகுப்புகளில் ஏற்படுத்தப்பட்ட கிணறுகளுக்கு நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைத்தல்.



இனம் 1 - தொகுப்பில் உள்ள விவசாய குழுக்களுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல்

**சிறப்பம்சங்கள்**

- நில நீர் ஆய்வின் அடிப்படையில் ஆழ்துளை/ குழாய் கிணறுகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அமைத்தல்.
- தொகுப்புகளுக்கான திறந்த வெளிக் கிணறுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் அமைத்தல்.
- பாசன வசதியில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு ஆழ்துளை / குழாய் கிணறுகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அமைத்தல்.



இனம் 2 - தனிநபர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு நீர் ஆதாரங்களை உருவாக்குதல்

- உருவாக்கப்பட்ட அனைத்து கிணறுகளுக்கும் மின் / சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் நிறுவுதல்.
- கிணறுகளில் இருந்து கிடைக்கப்பெறும் நீரினை முறையாக பயன்படுத்த நுண்ணீர் பாசன அமைப்பு ஏற்படுத்த வழிவகை செய்தல்.
- விவசாயிகள் தங்களது நிலத்திலேயே நீரினை சேமிக்க பண்ணைக்குட்டைகள் அமைத்து, அதன் மூலம் வறட்சி காலங்களில் பாசன வசதி பெறவும், மீன் வளர்ப்பு மூலம் கூடுதல் வருமானம் பெறவும் வழிவகை செய்தல்.
- தூர்வாரப்படாமல் உள்ள சிறுபாசன குளங்கள், ஊருணிகள், குளங்கள் வரத்துக் கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை தூர்வாரி அதன் மூலம் நீர்ப்பிடிப்பு கொள்ளளவினை அதிகரித்தல்.
- தொகுப்புகளில் ஏற்படுத்தப்பட்ட கிணறுகளுக்கு நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளை அமைத்து, அதன் மூலம் கிணறுகளின் நீர் இருப்பினை அதிகரித்தல்.

**தகுதி வரம்பு**

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துகளின் திட்டப் பகுதிகளில் உள்ள விவசாயிகள்.

**செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்**

தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வருடமும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராம பஞ்சாயத்துகள்.

**மானிய விவரம்**

அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இத்திட்டத்தின் அனைத்து இனங்களும் 100% மானியத்தில் செயல்படுத்தப்படும்.



இனம் 3 - பண்ணைக்குட்டைகள் அமைத்தல்



இனம் 4 - நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை தூர்வாரி மேம்படுத்துதல்

## 9. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலையின் வனப்பகுதி அருகிலுள்ள கிராமங்களில், மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளித்து, இயற்கை வளங்களையும் உயிரியல் பன்முகத்தன்மையையும் நிலைப்படுத்தி காக்கவும், அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும் உதகமண்டலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**மேற்கொள்ளப்படும் பணிகள்**

**சமுதாய நிலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகள்**

- கம்பிவலைத் தடுப்பணை (Gabion Check Dam)
- ஓடையோர தடுப்புச்சுவர் (Stream Bank Protection Wall)
- நிலச்சரிவு தடுப்புச்சுவர் (Landslide Protection Wall)
- தடுப்பணை (Check Dam)
- புதிய நீர் ஆதாரங்கள் அமைத்தல் (Creation of Irrigation Facilities)

**தனிநபர் விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்படும் பணிகள்**

- கம்பிவலை நிலப்பரப்பு சரிவு தடுப்பு சுவர் (Gabion Terrace Support Wall)
- தாவர வளர்ப்பு நடவடிக்கைகள் (Vegetative Measures)

**மானிய விபரங்கள்**

- ❖ சமுதாய பணிகள் – 100% மானியம்
- ❖ தனிநபர் விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்படும் பணிகள்
  - அ) பழங்குடியினருக்கு - 90% மானியம்
  - ஆ) ஆதிதிராவிடருக்கு - 80% மானியம்
  - இ) இதர பிரிவினருக்கு - 50% மானியம்



ஓடையோர தடுப்புச்சுவர்



கம்பிவலைத் தடுப்பணை



தடுப்பணை

## 10. நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நீர்வடிப்பகுதிகளில், நீர்வடிப்பகுதி வளர்ச்சி முகமை மூலம் அமைக்கப்பட்ட நீர் சேகரிப்பு கட்டமைப்புகளின், வரத்து மற்றும் வெளிச்செல்லும் கால்வாய்களில், நீரோட்டத்தை பாதிக்கும் வகையில் பரவியுள்ள புதர், செடி மற்றும் கொடிகளை அழித்து, நீர் சேகரிப்பு கட்டமைப்புகளுக்கு வரும் நீரோட்டத்தை அதிகரிக்கவும், கட்டமைப்புகளை தூர் வாரி அதன் கொள்ளளவை மீட்கும் பொருட்டும் பராமரிப்பு பணிகள், 2021-22 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி வளர்ச்சி முகமை மூலமாக பெறப்பட்ட நீர்வடிப்பகுதி வளர்ச்சி நிதியை கொண்டு வேளாண்மைப் பொறியியல் துறையிலுள்ள இயந்திரங்களை பயன்படுத்தி பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**புதிய நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல்**

தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு தேவைப்படும் நீர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு மழை நீரை சேகரித்து, நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்க, 2024-25 ஆம் ஆண்டில் பல்வேறு நீர்வடிப்பகுதிகளில் சமுதாய குளங்கள் போன்ற (மண் வேலை மட்டும் கொண்ட) புதிய நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**பராமரிப்பு பணி மேற்கொள்ள நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை தேர்வு செய்யும் முறை**

- தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நீர் பிடிப்பு பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்ட தடுப்பணைகள், கிராம குளங்கள், கசிவு நீர் குட்டைகள், அமிழ்வு நீர் குட்டைகள், கால்நடைகளுக்கு குட்டைகள், வரத்து கால்வாய்கள் மற்றும் சிறு ஊரணிகள் / ஏரிகள் / ஓடைகள் / கண்மாய்கள் ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேளாண்மை துணை இயக்குநர் (நுண்ணீர்ப் பாசனம்), வேளாண்மை உதவி இயக்குநர் (நுண்ணீர் பாசனம்) உதவி செயற் பொறியாளர் (வே.பொ) மற்றும் உதவி பொறியாளர் (வே.பொ) ஆகிய அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை தேர்வு செய்தல்.
- இக்குழு தேர்வு செய்த நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை, வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் செயற் பொறியாளர் (வே.பொ) கொண்ட குழு சரி பார்த்த பிறகு மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெறப்பட்ட நீர் சேகரிப்பு அமைப்புகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திட்டப்பகுதி**

அனைத்து மாவட்டங்கள் (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி நீங்கலாக)



பராமரிப்பு பணி செய்வதற்கு முன்பு



பராமரிப்பு பணி செய்யும் பொழுது



பராமரிப்பு பணி செய்த பின்பு

## 11. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

வேளாண் பணிகளை மேற்கொள்ளும் இயந்திரங்களை வேளாண் விளைநிலங்களிலேயே பழுது நீக்கி பராமரிப்பதற்கும், இயந்திரங்களை இயக்குவதற்கும் திறன் வாய்ந்த இளைஞர்களை உருவாக்கி கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிதியைக் கொண்டு, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வேளாண் இயந்திரங்கள் குறித்த செயல்விளக்கப் பயிற்சி மற்றும் டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி ஆகிய பயிற்சிகள் திருச்சி, திருவாரூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர், மதுரை ஆகிய ஆறு இடங்களிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் அரசு இயந்திர கலப்பை பணிமனைகளில் வழங்கப்படுகிறது.

**இவ்விரு பயிற்சிகளும் கட்டணமில்லா பயிற்சி என்பது சிறப்பு அம்சமாகும்.**

**அ) வேளாண் இயந்திரங்கள் குறித்த செயல்விளக்கப் பயிற்சி**

- பயிற்சி காலம் – 16 வேலை நாட்கள்
- வயது வரம்பு – 18 வயது முதல் 45 வயது வரை
- தகுதி – 12 ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் நான்கு வருட அனுபவம் (அல்லது) 10ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தொழிற்பயிற்சி (I.T.I.) பட்டய படிப்பு (டிப்ளமோ) உடன் இரண்டு வருட அனுபவம்.
- பணிமனைகளில் தங்கும் வசதி இல்லை.



இரட்டைக் கட்டுப்பாட்டு வசதி கொண்ட டிராக்டர் (Dual Control Tractor) மூலம் பயிற்சி

**ஆ) டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி**

தற்பொழுது வேளாண்மையில் டிராக்டர்களின் பயன்பாடு அதிகளவில் உள்ளதால், டிராக்டர் இயக்குவதற்கு அதிக அளவில் திறன்பெற்ற ஓட்டுநர்கள் தேவைப்படுகின்றனர். இதற்காக, தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக கிராமப்புற இளைஞர்களுக்கு டிராக்டர் ஓட்டுநர் பயிற்சியினை அளித்து, டிராக்டர் ஓட்டுநர் உரிமம் பெற்று தரும் வகையில், டிராக்டரின் வெட்டுத் தோற்ற மாதிரி (Tractor Cut Section Model) மற்றும் பயிற்சியினை எளிமையாக வழங்குவதற்கு இரட்டைக் கட்டுப்பாட்டு வசதி கொண்ட டிராக்டர் (Dual Control Tractor) ஆகிய சிறப்பம்சங்களுடன். வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர கலப்பை பணிமனையில் 'டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி பள்ளி' நிறுவப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூரில் அமைந்துள்ள பணிமனையில் டிராக்டர் ஓட்டுவதற்கான பாவனை பயிற்சி சாதனமும் (Tractor Simulator) நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம், கிராமப்புற இளைஞர்கள் டிராக்டர் என்ஜின் செயல்பாடு குறித்து தெளிவாக அறிந்து கொள்ளவும், டிராக்டர் ஓட்டுநர் பயிற்சியினை எளிமையாக பெறவும் முடியும்.

டிராக்டர் ஓட்டுவதற்கான பாவனை பயிற்சி சாதனம் (Tractor Simulator), பல்வேறு வகையான கள சூழல்களை சித்தரித்து, மென்பொருள் மூலம் பயிற்சிகளை வழங்கும் ஒரு நவீன தொழில்நுட்பம் ஆகும். மேலும், ஒரு பயிற்றுநர், டிராக்டர் ஓட்டுவதற்கான பாவனை பயிற்சி சாதனத்தின் (Tractor Simulator) உதவியுடன் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும். இம்முறையில் பயிற்சி பெறுபவர்கள் மிகவும் பாதுகாப்பான சூழ்நிலையில் எளிதான முறையில் பயிற்சி பெற முடியும். டிராக்டர் ஓட்டுவதற்கான பாவனை பயிற்சி சாதனம் மூலம் டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி வழங்கும் திட்டம் இதுவரை எங்கும் இல்லாத ஒரு நவீன பயிற்சியாகும்.

**பயிற்சி விபரம்**

- பயிற்சி காலம் – 22 வேலை நாட்கள்
- வயது வரம்பு – 18 வயது முதல் 45 வயது வரை
- தகுதி – 8 ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் மூன்று வருட அனுபவம் (அல்லது) 10 ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் ஒரு வருட அனுபவம் (அல்லது) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து தொழிற்பயிற்சி (I.T.I.) பட்டய படிப்பு (டிப்ளமோ) உடன் ஆறுமாத அனுபவம்.
- பணிமனைகளில் தங்கும் வசதி இல்லை.



டிராக்டர் ஓட்டுவதற்கான பாவனை பயிற்சி சாதனம் (Tractor Simulator)



டிராக்டரின் வெட்டுத் தோற்ற மாதிரி (Tractor Cut Section Model)

**பயிற்சி வழங்கப்படும் பணிமனைகளின் விபரம் - தொடர்பு கொள்ள**

| | | |
|---|---|---|
| திருவாரூர் | : | திரு. மா. சந்திரசேகரன், உதவிப் பொறியாளர் (வே.பொ), 8248794912 |
| மதுரை | : | திருமதி. அ. மகேஸ்வரி, உதவிப் பொறியாளர் (வே.பொ) 8428981436 |
| திருநெல்வேலி | : | திரு. சி. சாணக்கியன், உதவிப் பொறியாளர் (வே.பொ), 8838600112 |
| கோயம்புத்தூர் | : | திரு. பா. கார்த்திகேயன், உதவி செயற்பொறியாளர் (வே.பொ) 9443751142 |
| திருச்சி | : | திரு. ஆ. அசோகன், உதவிப் பொறியாளர் (வே.பொ) 9698991815 |
| வேலூர் | : | திரு. கா. குருநாதன், உதவிப் பொறியாளர் (வே.பொ) 8012242236 |

**விண்ணப்பிக்க**

**மேலும் தொடர்புக்கு**

மின்னஞ்சல் : aedcewrm@gmail.com

aedcesolar@gmail.com

## 12. படித்த இளைஞர்களுக்கு வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி

படித்த இளைஞர்களை வேளாண்மையில் பங்குபெற செய்திடவும், வேளாண் தொழில்முனைவோர்களாக உருவாக்கிடவும், அவர்களுக்கு வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்கள் சார்ந்த பயிற்சியானது சென்னை, நந்தனத்தில் உள்ள மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**சிறப்பம்சங்கள்**

- ✓ வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களான வேளாண் இயந்திரமயமாக்கல் நீர் மேலாண்மை, அறுவடைக்குப் பிந்தைய மற்றும் வேளாண்மையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைச் சார்ந்த தொழில்நுட்பங்கள் போன்றவற்றினைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அவை செயல்படும் விதங்கள் பற்றிய விளக்கம் அளித்தல்.
- ✓ சாகுபடி பயிர்களுக்கு ஏற்றவாறு இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை தேர்வு செய்திடும் வகையில் பங்கேற்பாளர்களின் திறனை மேம்படுத்தல்.

**தகுதி**

கல்லூரியில் பயின்ற, படிக்கும் மற்றும் மென்பொருள் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் வேளாண்மையில் ஆர்வமுடைய இளைஞர்கள்.

**விண்ணப்பிக்கும் முறை**


பயிற்சியில் பங்கேற்க விரும்பும் இளைஞர்கள் http://aed.tn.gov.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள https://forms.gle/epqsyHR23ZgT24xM8 என்ற இணைப்பின் மூலம் படிவத்தினைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் ஒரு குழுவிற்கு 20 இளைஞர்கள் என்ற வீதத்தில் மொத்தம் 500 இளைஞர்களுக்கு 25 குழுக்களாக ஒவ்வொரு குழுவிற்கும் 5 நாட்கள் என்ற கால அளவில் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்கு தேர்வானவர்களின் விபரம் அவர்களின் மின்னஞ்சலின் மூலமாக தெரிவிக்கப்படும்.

**பயிற்சி விபரம்**

| நாள் | விபரம் |
|---|---|
| நாள்-1 | • வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் மற்றும் அரசின் திட்டங்கள் - ஓர் பார்வை<br>• நவீன வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் ஓர் பார்வை<br>• சாகுபடி பயிர்களுக்கு ஏற்றவாறு வேளாண் இயந்திரத்தினை தேர்வு செய்யும் முறை |
| நாள்-2 | • நீர் மேலாண்மைத் தொழில்நுட்பங்கள்<br>• களப்பயிற்சி |
| நாள்-3 | வேளாண்மையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பங்கள்<br>• சூரிய கூடார உலர்த்தி<br>• சூரிய சக்தி பம்புசெட்டு<br>• சூரிய சக்தி மின்வேலி |
| நாள்-4 | • மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள்<br>• அக்மார்க் மற்றும் FSSAI சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகள் |
| நாள்-5 | • வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்ப தொழில்முனைவோருக்கான வாய்ப்புகள் |



ஒலி, ஒளி அரங்கில் பயிற்சி வகுப்பு



டிராக்டர் இன்ஜினின் வெட்டுத் தோற்ற மாதிரி மூலம் விளக்கம்



களப்பயிற்சி



அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் பற்றிய விளக்கம்

**மேலும் விவரங்களுக்கு**

1) திருமதி. இரா. ஹில்டா கண்மணி,
உதவி செயற்பொறியாளர் (வே.பொ)
98658 30380

2) திரு. இரா. ஜீவா
உதவிப் பொறியாளர் (வே.பொ)
99408 67566

**மின்னஞ்சல் :** tnsamidc@gmail.com

**விண்ணப்பிக்க**




**தலைமைப் பொறியாளர் (வே.பொ)**

## வேளாண்மைப் பொறியியல் துறை

எண்.487, அண்ணா சாலை, நந்தனம்,
சென்னை - 600 035
aedcewrm@gmail.com
aed.tn.gov.in

**மேலும் தொடர்புக்கு**

சம்பந்தப்பட்ட
மாவட்ட அளவில் – செயற்பொறியாளர் (வே.பொ),
வருவாய் கோட்ட அளவில் – உதவி செயற்பொறியாளர் (வே.பொ) மற்றும்
வட்டார அளவில் – உதவிப் பொறியாளர் (வே.பொ) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ)